# தச்சன் குரல்

இதழ் -. 01 அக்டோபர் 2024

வள்ளுவர் ஆண்டு 2055

தமிழ்நாடு கத்தோலிக்க இளைஞர் இயக்கம்



## செபமாலை செபிப்போம்!

## இணைந்து பயணிக்கும் திருஅவை ஆவோம்...

**புனித சூசையப்பர் கோவில்**
**சமயநல்லூர்**

STJOSEPH_CHURCH

# தச்சன் குரல்



மாத இதழ்
அக்டோபர் 2024

## ஆசிரியர் குழு

1.லாரா விஷால்
2.மைக்கேல் பிராங்க்
3.லூர்து டார்வின்



## தொடர்புக்கு


புனித சூசையப்பர் கோவில்
சமயநல்லூர் , மதுரை 625405

9487132211

stjoseph_church

www.stjoseph_church

# உள்ளே...!


பங்குத் தந்தையின் மனதில் 04

பங்கு வரலாறு 06

அன்னை மரி அவள் அன்னை மடியில் 10

மறந்த மனிதத்தை மீட்டெடுக்க 16

உறவின் கரங்கள் 18

முதுமையில் ஏனோ முள்முடி 20


## பங்கு பணிகள்


மீண்டும் குழந்தையாக 22

இளைஞர் எழுச்சி 24

கீழமாத்துர் திருவிழா

ஊர்மெச்சிக்குளம் திருவிழா

எம்.ஜி.ஆர்.நகர் திருவிழா




# பங்குதந்தையின் மனதில்

## இளைஞர் இயேசுவில் அன்பிற்கினியவர்களே,

உங்களை நமது பங்கின் மின்னிதழாகிய 'தச்சன் குரல்' வழியாகச் சந்திப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். 1910ஆம் ஆண்டு உருவான நமது சமயநல்லூர் புனித சூசையப்பர் பங்கு இறைமக்களை வரவேற்கும் தளமாகப் பயணித்திருக்கிறது. இங்கேயே வாழ்ந்தவர்களுக்கு நம்பிக்கையாகவும் வெளியூர்களிலிருந்து வந்தோருக்குப் புகலிடமாகவும் திகழ்ந்திருக்கிறது. பஞ்சாலைத் தொழிலாளர்கள், வேளாண் மக்கள், அன்றாடக் கூலித் தொழிலாளர்கள் ஆகியோருக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழும் புனித சூசையப்பரின் பரிந்துரையால் நல்வாழ்வினை வழங்கியிருக்கிறது. நமது பங்கு, தன்னிடமிருந்து புதிய பங்குகள் உருப்பெருவதற்கு தாராள உள்ளத்துடன் இயங்கியிருக்கிறது. அதே வேளையில், தன்னில் பிறந்து, வளர்ந்து, இறைநம்பிக்கையில் ஆழப்பட்டு, அருள்வாழ்வில் வேரூன்றிய தனது பிள்ளைகள் அயல்நாட்டிலும் அண்டை மாநிலங்களிலும் அருகாமை ஊர்களிலும் குடியேறி முன்னேற்றமடைந்திருப்பது கண்டு பெருமகிழ்வடைகின்றது.

நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டிருக்கும் நமது பங்குத் திருஅவை தனது முகத்தை பிறர் முன்பு ஒளிரச் செய்ய வேண்டிய தேவை உள்ளது. நமது பங்கு இறையாட்சி சமூகமாக உருப்பெற்ற, உருப்பெறுகின்ற நமது பயணச் சுவடுகளை எதிர்காலத் தலைமுறைக்குக் கடத்த வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. இதனை உணர்ந்தே நமது இளைஞர்களது இணைந்த செயல்பாட்டின் விளைச்சலாக மலர்ந்துள்ளது இம்மின்னிதழ்..



நமது பங்கின் பாதுகாவலரான புனித சூசையப்பர் தச்சுத் தொழிலைச் செய்தார் என அறிவோம்அவரது வளர்ப்பு மகனும் நம் ஆண்டவரும் உடன்பிறந்தவருமான இயேசு, தச்சன் மகன் (மத் 13:55) என அறியப்பட்டார். எனவே, சூசையப்பரது பாதுகாவலில் உள்ள நமது பங்குத் திருஅவைக்கு அவர் செய்த தொழிலின் அடிப்படையில் 'தச்சன் குரல்' என்ற பெயரில் நமது பங்குத் திருஅவையின் மின்னிதழை வெளியிடுவதில் பெருமையடைகின்றோம்.

நூற்றாண்டு கண்ட நமது பங்கு வளர்ந்துள்ளது என்பதை நமது பங்குக் கோயில், குருசடி, இங்கு உருவாகியுள்ள கல்வி நிலையங்கள், கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட சமூகநலத் திட்டங்கள் போன்றவற்றைக் கொண்டு மட்டும் அளவிட இயலாது. மாறாக, நமது மக்களது கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சி, மறையறிவின் வளர்ச்சி, அடுத்திருப்பவர்மீது அக்கறை, அன்பு, நீதி, சமத்துவம் போன்ற நற்செய்தி விழுமியங்களின் அடிப்படையில் அமைந்த மனநிலை போன்றவைதான் நமது பங்குத் திருஅவையின் வளர்ச்சியை உறுதிசெய்யும். இதனை மனதிற் கொண்டு நமது பங்குத் திருஅவைக்கான திட்டங்களை வரும் நாட்களில் வகுக்க முயலுவோம்.

அகில உலகத் திருஅவையோடு, நாம் 2025ஆம் ஆண்டினை 'எதிர்நோக்கின் திருப்பயணிகள்' என்ற இலக்கோடுச் சிறப்பிக்க உள்ளோம். இதனைக் கருத்தில் கொண்டு, 2025ஆம் ஆண்டிற்கான செயல்திட்டத்தை நமது பங்கிற்காக உருவாக்குவோம். நமது பாதுகாவலரான புனித சூசையப்பரின் வழியில் இணைந்து இயங்கும் திருஅவையாக உருப்பெறுவோம். அதற்கு நாம் இம்மாதம் சிறப்பிக்கும் பாத்திமா அன்னை பரிந்துரையால் முன்னோக்கி விரைந்து செல்ல இறைவன் நமக்கு அருள்புரிவாராக!



**இளைஞர் இயேசுவில் உங்களது உடன்பிறந்தவனாக,**
**அருள்பணி. மபா.மார்ட்டின் ஜோசப்**
**பங்கு அருள்பணியாளர்**
**சமயநல்லூர்.**

# பங்கு வரலாறு



## புனித சூசையப்பர் கோவில் சமயநல்லூர்

சமயநல்லூரின் தோற்றம் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புதுக்கோட்டையைச் சேர்ந்த சில கத்தோலிக்க விவசாயிகள் இங்கு குடியேறி வெற்றிலைகளை பயிரிட்டபோது தொடங்கியது . பின்னர், மதுரையில் இரண்டு தியாகராஜா பருத்தி நூற்பு ஆலைகள் தொடங்கப்பட்டபோது இந்த கிராமம் மக்கள் தொகையில் வளர்ந்தது.
Fr.C.Montaud.SJ. 1923 இல் தேவாலயத்திற்கு அடிக்கல் நாட்டினார்

தொடர்ந்து Fr. கார்னியர் SJ,
Fr. T. Kurieu SJ தேவாலய கோபுரத்தை எழுப்பினார். Fr. பீட்டர் ராய் பிரஸ்பைட்டரி மற்றும் பள்ளி கட்டிடத்தை மேம்படுத்தினார்.
Frs. அருள் ராயன், பி. பின்டோ மற்றும் பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் தங்கள் மந்தையின் ஆன்மீக நிலையை உயர்த்த உழைத்தனர்.
Fr.லூர்து உபகாரம், தேவாலயத்தையும் டென் பிரஸ்பைட்டரியையும் (கெபி) புதுப்பித்தார்;

பிரஸ்பைட்டரிக்கும் பிரதான சாலைக்கும் இடையில் ஒரு பாதையை அமைத்தது; சுற்றுச்சுவர் கட்டப்பட்டது; தோடனேரி மற்றும்,
கீழ மத்தூரில் தேவாலயங்கள் கட்டி, மாணவர்களுக்கு ஏராளமான தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்தார். முன்னதாக Fr. அலெக்சிஸ் (1948-1967) இந்த திருச்சபைக்கு 18 ஆண்டுகள் சேவை செய்தார், பள்ளிக்கு இரண்டு மாடி கட்டிடம், பாத்திமா மாதாவுக்கான கோட்டை மற்றும் தேவாலயத்தை விரிவுபடுத்தினார்.
நீண்ட போராட்டங்களுக்குப் பிறகு மற்ற மூன்று சாதனைகள் சாத்தியமாகின. பள்ளிக்கு பின்புறம் திறந்தவெளி மைதானம் இருந்தது, அதை பள்ளிக்கு விளையாட்டு மைதானமாக பயன்படுத்த கலெக்டர் நன்கொடை அளிக்க தயாராக இருந்தார். குயவர்கள் அதைக் கேள்விப்பட்டவுடனேயே அது தங்களுடையது என்று கூறி ஒரே இரவில் 40 வீடுகளைக் கட்டினர். அவர்கள் வெளியேற இரண்டரை ஆண்டுகள் ஆனது. ' கல்லறை நிலத்தின் மையத்தில் உள்ள ஒரு நிலத்திற்கான உரிமைகோரல் இருந்தது,
அதை Fr.லூர்து உபகாரம். ஊர்மெச்சிக்குளத்தில் அவர் கல்லறைக்கு அதிகாரப்பூர்வ அனுமதி பெற போராட வேண்டியிருந்தது.
தேவாலயத்திற்குப் பின்னால் மற்றொரு மைதானம் இருந்தது, இது ஒரு கான்வென்ட்டுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று தந்தை நினைத்தார். அந்த இடத்தைப் பெறுவதற்கு ஏறத்தாழ பத்து வருடங்கள் போராடியது. 1980ல் திருச்சபை பாதிரியாராக பொறுப்பேற்ற Fr. வி.மைக்கேல் குறவன்குளத்தில் தேவாலயம், சோழவந்தானில் பள்ளி கட்டிடம், ஏழைகளுக்கு வீடுகள், கல்லறைக்கு சுற்றுச்சுவர் கட்டினார்.1983 ஆம் ஆண்டு இந்த திருச்சபைக்கு வந்த
Fr.அல்போன்ஸ்,
ஊர்மெச்சிக்குளத்தில் தேவாலயம் கட்டியதோடு, சமயநல்லூர் மற்றும் சோழவந்தானில் உள்ள பள்ளி கட்டிடங்களை மேம்படுத்தவும், ஆர்வமுள்ள குழுவின் உதவியுடன் நேரடியாக சுவிசேஷம் செய்தார். அவர் சுமார் 50 திருமணங்களைத் திருத்தினார்; கொண்டமாரி ஆலையில் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே இருந்த பதற்றத்தை குறைக்க

முயற்சிகள் மேற்கொண்டனர். கிராமங்களில் வாலிபர் சங்கங்களைத் தொடங்கி, சமயச் சிந்தனைக்கும் உரையாடலுக்கும் வழி வகுத்தார். இலங்கைத் தமிழர்களின் துயரங்களை உணர்ந்து உண்ணாவிரதம் மேற்கொண்டார். உடனடியாக குடிநீர் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக காலி பானைகளுடன் பெண்கள் ஊர்வலம் நடத்தினார்.

அவர் ஆறு ஆசிரியர் பணியிடங்களைப் பெறுவதற்கு உதவியாக இருந்தார். 1990 இல் ரூ. 100 பங்குடன், 1991 இல் பால் பண்ணையை அவர் தொடங்கினார். சமயநல்லூர் மற்றும் சோழவந்தான் ஆகிய இரு பகுதிகளிலும் உள்ள ஆசிரியர்களின் ஒத்துழைப்பைத் திரட்டி, திருச்சபையில் பல ஆன்மிகப் பணிகளைச் செய்தார் பள்ளிக்கு குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

Fr. சிலுவை மைக்கேல் நடுநிலைப்பள்ளியை உயர் நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தினார். ஓடு கூரையை கான்கிரீட் கூரையாக மாற்றினார்.

Fr. ஜேம்ஸ் பால்ராஜ் கீழமாத்தூரில் ஒரு தேவாலயத்தின் கட்டுமானத்தைத் தொடங்கினார், Fr. வேதமாணிக்கம் மேல்நிலைப் பள்ளியில் ஆங்கில வழிக்கல்வியைத் தொடங்கி 140"x23" அளவில் முதல் தளத்தைக் கட்டினார். சமயநல்லூரில் உள்ள செயின்ட் ஜான் பிரிட்டோ நர்சரி & பிரைமரி பள்ளியை கட்டினார் .

இந்த அனைத்து சேவைகளும், கத்தோலிக்க செயல் குழு பங்கு குருக்களுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

இந்த திருச்சபையின் ஆன்மீக தொனி பின்வரும் மத சபைகளின் முன்னிலையில் பராமரிக்கப்படுகிறது: பரவையில் உள்ள ஹோலி கிராஸ், சமயநல்லூரில் SMI, புல்லூட்டில் பாய்ஸ் டவுன் நடத்தும் டி லா சாலே சகோதரர்கள் மற்றும் சோழவந்தானில் உள்ள பெங்களூர் செயின்ட் ஆனிஸ்,மேலும், இந்த திருச்சபை புனித குடும்பம், லெஜியன் ஆஃப் மேரி, வின்செண்ட் டி பால், பாடகர், பலிபீட சிறுவர்களின் செயல்பாடுகளால் போஷிக்கப்பட்டு வருகிறது.

இந்த திருச்சபை தொழில்களுக்கு வளமான களமாக இருப்பதில் ஆச்சரியமில்லை.

இது பதினொரு மறைமாவட்ட தந்தைகள், இரண்டு SVD, ஒரு ஜேசுட் மற்றும் ஒரு ஹோலி கிராஸ் தந்தையர்களைக் கொண்டுள்ளது. ஆறு கேப்ரியல் பிரதர்ஸ், ஒரு டி லா சாலே சகோதரர், இரண்டு CIC சகோதரிகள், இரண்டு ஹோலி கிராஸ், ஒரு க்ளூனி மற்றும் ஒரு பிரசன்டேஷன், ஒரு லியூகா மற்றும் ஒரு MSI.

இந்த ஊராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 510 குடும்பங்களாகும். அவர்களில் பெரும்பாலும் மூத்த குடிமக்கள் சமயநல்லூரில் உள்ளனர்,

Fr. என்.பி. ஊர்மெச்சிக்குளத்தில் தேவாலயம் ,சமயநல்லூரில் பள்ளிக் கட்டிடங்களை சீரமைத்தார். Fr. லூர்துராஜ் விசுவாச அரங்கம், காசிமீர் மண்டபம், பள்ளிக் கட்டிடம் ஆகியவற்றைக் கட்டினார். அவரது காலத்தில் Fr.பெனடிக்ட் அம்புரோஸ் 1993 இல் சோழவந்தானில் மரியானஸ் மண்டபத்தையும் புதிய தேவாலயத்தையும் கட்டினார். அவருடைய காலத்தில், Fr. பெனடிக்ட் பர்னபாஸ் திருச்சபை தேவாலயத்தைப் புதுப்பித்து அதற்கு புதிய சூழலைக் கொடுத்தார்

திருச்சபை பாதிரியார்கள்

Fr. பிரின்ஸ் 1910-1913
Fr. அப்பாவுநாதர் 1913-1921
Fr. ராஜா அதிசயம் 1921-1924
Fr. ஞானப்பிரகாசம் 1924-1926
Fr. ஆஸ்ட்ருக் 1926
Fr. அந்தோனிசானி துரை 1926
Fr. கிளமென்ட் மொன்டாட் 1926-1932
Fr. பீட்டர் கார்னியர் 1932-1935
Fr. தாமஸ் குரியன் 1935-1938
Fr. பீட்டர் 1938
Fr. சாமிக்கண்ணு 1938-1939
Fr. பீட்டர் ராய் 1939-1948
Fr. அலெக்சிஸ் 1948-1967
Fr. பின்டோ 1967
Fr. அருள் ராயன் 1967-1970
Fr. பிரான்சிஸ் சேவியர் 1970-1975
Fr. லூர்து உபாகரம் 1980-1983
Fr. மைக்கேல் 1983
Fr. என்.பி. அல்போன்ஸ் 1983-1985
Fr. லூர்துராஜ் 1985-1989
Fr. பெனடிக்ட் அம்புரோஸ் ராஜ் 1989-1994
Fr. ஜெயா ஜோதி 1994-1995
Fr. பெனடிக்ட் பர்னபாஸ் 1995-1998
Fr. சிலுவை மைக்கேல் 1998-2004
Fr. ஜேம்ஸ் பால்ராஜ் 2004-2009
Fr. ஏ.வேதமாணிக்கம் 2009-2015
Fr. எட்வர்ட் பிரான்சிஸ் 2015-2020
Fr. பால் பிரிட்டோ 2020-2024
Fr.மார்ட்டின் ஜோசப்...



**சாம் மோசஸ்(BE)**
**லூக்கா அன்பியம்**

# அன்னை மரி...
# அவள் அன்னை மடியில் ...!

- **கருவாகி உருவாகும் அனைத்து உயிர்களும். நம் ஆதிபெற்றோர்களின் பாவத்தை தாங்கியே பிறக்கின்றோம்**

இதற்கு விளக்காக ஜென்ம மாசின்றி பிறந்து, மரணம் வரை அதே மாசின்மையில் பிறந்து இன்று நம் அனைவருக்கும் தாயாக இருப்பது நம் அன்னை மரியாள்.
இயேசுவை அவளுடைய இடைதனில் - தாங்கிட தெய்வீக மகள் மழலையாம் உதித்த பொன்னாள்.
கலிலியோவிலுள்ள நாசரேத்தில் பிறந்த அழகும், அமைதியும் உள்ள அன்பு மகளாக செல்வச் செழிப்புள்ள பிள்ளையாக இருந்தவள் அன்னாள். அன்னாள் யூத முறைப்படி வளர்க்கப்பட்டு, அவளுக்காக தாவீதின் குலத்தில் பிறந்த சுவக்கினை தேர்ந்தெடுக்கின்றார்கள்.



இவர் பெரிய ஆட்டு மந்தை உடையவராகவும், செல்வச் செழிப்புடையவர் என்றும் சொல்லப்படுகிறது.
புனித அன்னாளும், சுவக்கினும் திருமணம் செய்து கொள்கின்றனர். இவர்கள் தங்கள் குல முறைப்படி சட்டங்களை நுணுக்கமாக அனுசரித்து வந்தார்கள். ஏழை, எளிய மக்களுக்கு தர்மங்களைச் செய்து அனைவருடனும் நட்புடன் வாழ்ந்தார்கள்.அன்று வாழ்ந்த யூதகுலத்தைச் சேர்ந்த எல்லா தம்பதியினரும் ,மீட்பர் ஒருவர் பிறப்பார்.

அவர் நம்முடைய குலத்தில்தான் பிறப்பார் என்ற நம்பிக்கையோடு, எந்த தீச்செயலுக்கும் இடம் கொடாது, தூய்மையோடு வாழ்ந்தார்கள். அன்னாளும், சுவக்கினும் அற்புதமான வாழ்க்கை நடத்திக் கொண்டு இருந்தனர்.

அந்த நேரத்தில் அவர்களுடைய வாழ்கையில் ஒரு திருவிளையாடல். இருபது வருடம்வரை மலடி என்ற பட்டத்தோடு வாழ்ந்துக் கொண்டு இருந்தாள். ஆனால் நம்பிக்கையில் தளரவில்லை. அன்று ஓர் பண்டிகை நாள். யூதர்களில் முக்கியமான பண்டிகை. அன்று எருசலேம் ஆலயம். பக்தர்களால் நிரம்பி வழிந்தது. காணிக்கைகளும், பலிகளும் குவிந்துக் கொண்டே இருந்தது.இந்த தெய்வம் எப்படிப்பட்ட தெய்வம். முதிர் வயதில் ஆபிரகாமுக்கு குழந்தை வரமும். அன்னாளுக்கு சாமுவேலைக் கொடுத்த தெய்வம் என்னை மட்டும் சோதிப்பது ஏன்?. அன்னாளும், சுவக்கினும் கதறிய கதறல் ஆலயத்தில் எதிரொலித்தது.

அந்த நேரம் அவளுக்கு சாமுவேல் தாய் அன்னாள் நினைவிற்கு வந்தாள்.தனக்கு குழந்தை கிடைத்தால் கடவுளுக்கு கொடுப்பேன் என்று சாமுவேலை கடவுளுக்கு அர்பணித்ததுப் போல் எனக்கும் கொடுத்தால் கோயிலுக்கே காணிக்கையாக தருவேன் என உறுதிப்படுத்தினார். அந்த வார்த்தையை கேட்டு கடவுள் புன்னகை புரிந்தார். இயேசு பிறப்பதற்கு ஒரு பரிசுத்தமான பெண் வேண்டும். அதை நல்ல படியாக வளர்க்க தாய் வேண்டும்.

இந்த யூத இனத்தில் அன்னாளைவிட்டால் வேறு யார் இருக்கின்றார்கள் என்று நினைத்த கடவுள் அன்னாளுக்கு குழந்தை வரத்தைக் கொடுத்தார்.

அன்னாளின் வயிற்றில் குழந்தை உதித்ததும் வானத்தில் மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று இறைவனின் திட்டம் விண்ணோர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது.






மூவோர் இறைவன் கபிரியேல் தூதரை அன்னாள் வீட்டிற்கு அனுப்பி அவர்களுக்கு ஆறுதல் அளித்துவாரும் .அவர்கள் வேண்டுதல் கேட்கப்பட்டது என்றும் கூறினார், என்று வரலாற்று நூல்கள் கூறுகின்றது.
இவ்வாறு அன்னாள் வயிற்றில் கருவில் இருந்த மரியாள் எல்லா நற்குணங்களும் பெற்றவராக புனித தன்மையை முழுமையாக அடைந்தவராக இருந்தார்.
அன்னாளின் வயிற்றில் இருக்கும் கருதான் தனது தலையை நசுக்கப் போகிறது என்று சாத்தான் அறிந்து, எப்படியாவது கருவிலே அழித்துவிட வேண்டும் என்று திட்டமிட்டதாகவும், கடவுள் வானதூதர்களை அனுப்பினார் எனவும் கூறப்படுகிறது.
அன்னாள் அழகிய மகவை ,மரியாளை பெற்று எடுக்கிறார்..!
-தொடரும்...

ஜெஃப்ரின்(BE)
பேதுரு அண்பியம்

# தெரிந்து..
# தெளிவோம் ..!





## இடமிருந்து வலம்:

1.மரியாள் அர்ப்பணிக்கப்பட்ட கோவில் எங்குள்ளது?

4.ஆலயம் வேறு சொல்?

5.மரியாளின் பெற்றோரை பற்றி கூறும் நற்செய்தி நூல்.

6. __________ விளக்கேல்.

9.இயேசு கிறிஸ்து எது செய்வதில் வித்தகர்?

11.கடவுளுக்காக தனது மகனையே ________ ஆக கொடுக்க துணிந்தவர் ஆபிரகாம்

13.போர் வீரர்கள் அணிவது?

16.___________அற்புதங்களை இயேசு கிறிஸ்து செய்தார்.(கடைசி எழுத்து இல்லை).

17. நற்கருணை வடிவமாக நாம் உட்கொள்ளுவது.(கலைந்துள்ளது)

18.இயேசு கிறிஸ்து எங்கு வாழ்ந்தார்?

24.பறவை வேறு சொல்?

25.நிலத்தில் இருந்து கிடைப்பது ,இரயில் இஞ்சினிக்கு பயன்படுவது?

## மேலிருந்து கீழ்:

1.இறைவாக்கினர் ஒருவர்.

2.எந்த நூலில் "ஆண்டவர் மோசேயிடம் கூறியது" எனும் வாசகம் ஐம்பதுக்கும் மேலான முறை வருகிறது.

7.கடவுள்__________உடையவர்.

8.பழையது..! (எதிராக)

10.திருமுழுக்கு யோவானின் தாய்?

11.நவரத்தினங்களில் ஒன்று.

13.இயேசு கிறிஸ்து தனது சீடர்களை நோக்கி எதன் மீது நடந்தார்?

14.திருவிழாவின் போது திருப்பலிக்கு பின் இது நடைபெறும்.(கடைசி எழுத்து இல்லை)

15.கடவுள் நம் கேள்விக்கு ________ஆக இருக்கிறார்.

16.___________அந்தோனியார்.

19.இறைநூல் ஒன்று.(கலைந்துள்ளது).

20.நகோமியின் மருமகள்.

22.இயேசு கிறிஸ்துவை தவிர வேறு யார் ஒருவர் தூய ஆவியாரால் கருவுற்று பிறந்தார்?

## வலமிருந்து இடம்.

3.குதிரை.

12.கடவுளின் இல்லம் என அழைக்கப்படும் ஊர் எது?

20.நாகூரில் பிறந்த தமிழ் எழுத்தாளர்?

21.இதன் பல் விலையுள்ளனவை.

23.இசைக்கருவி.

## கீழிருந்து மேல்:

4.கோவிலின் உச்சியில் இருப்பது?

6.ஒரு நாடு.

18. __________அனைவரும் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டுள்ளோம்.

24.வெற்றி பெற்றால் கிடைப்பது. (கலைந்துள்ளது).



லாரா விஷால் (BE)
சகாய மாதா
அன்பியம்



# மறந்த மனிதத்தை மீட்டெடுக்க

ஆகஸ்ட் 9 , நடந்த துயரம். 36 மணி நேரம் தொடர்ந்து உறங்காமல் உயிர்களை காப்பாற்றிய மருத்துவரை மது அருந்திய மிருகங்கள் பாலியல் இச்சைக்கு இறையாக்கின.

நம் தாய்நாட்டில் ஒரு மணிநேரத்திற்கு மூன்று பாலியல் கொடுமைகள் நடக்கின்றன. யார் காரணம்?

ஆதவன் உதித்து மதி மறையும்வரை நம் பெண்கள் இச்சைகொண்ட மிருகங்களுக்கு இறையாகுகிறார்கள்

78 ஆண்டு காலம் கடந்த சுதந்திரம், யாருக்கு? நம் தங்கைகள் வீதியில் நடக்க அச்சம் கொள்ளும் இச்சுதந்திரம் எதற்கு??

எத்தனை நிர்பையாக்களை பார்க்க போகிறோம் ? எத்தனை தாய், தங்கைகளை தவிக்கவிடபோகிறோம்?

மங்கைகளுக்கு தற்காப்பை கற்பிப்பதை கைவிட்டு, மகன்களுக்கு மங்கைகளை மதிக்கவும், இச்சை கொண்ட பார்வையை தீயிலிட்டு எரிக்கவும் கற்பிப்போம்...!



பாலியல் கொடுமைதனை
அக்னிபார்வை கொண்டு,
அளவற்ற வீரம் கொண்டு,
ஆழிக்கடலென ஆர்ப்பரித்து
அழித்துவிடு!

நீயே ஆரம்பம், நீயே எல்லை;
நீயே சூரியன், நீயே சந்திரன்;
நீயே வானம், நீயே பூமி;
நீயே வில், நீயே அம்பு;
நீயே வினா, நீயே விடை!
உன்னில் நீயே அமைத்துக்கொள்
பாதுகாப்பு வளையத்தை!

துணித்து நில்! துணிவு கொள்!
துணையிருக்கும் எல்லாம்!

பாதுகாக்கப்படட்டும் பெண்மை
உன்னால்!
பாதுகாக்கப்படட்டும் நம்
தாய்த்திருநாட்டின் பெருமை!








பிரின்ஸ் ஆரோக்கியராஜ்(BE)
வளனார் அன்பியம்

# உறவின் கரங்கள்..!

வெள்ளம், வரட்சி, புயல், பூகம்பம், எரிமலை வெடிப்பு,சுனாமி , எல்லாம் நாளிதழில் நாள்தோறும் நடப்பதாக, கேட்கும் நிலை ஆகிவிட்டது.

## வயநாட்டின் உயிர் வலி



முறையின்றி ஜீன் 30 விடியற்காலை, விடியும் முன் கொட்டிய மழையில், மண்ணுரிந்து, மண்ணுக்குள் மக்களுடன் புதைந்தது வயநாடு... புஞ்சிரிமட்டம், முண்டகை, சூரல்மலா என்றமூன்று கிராமங்கள். முன்பின் தெரியாத இடமாக மறைந்துபோனது. 400 பேரை நிலத்தில் புதைத்தது. அந்த நிலச்சரிவு, 150 பேர் எங்கோ? என்ற கேள்வி , இன்னும் விடையில்லாமல் இருக்கிறது.
வீடுகள், விலங்குகள், பள்ளிக்கூடம், பிஞ்சுகுழந்தைகள், என பாகுபாடின்றி, புதைந்தன.
மீட்பு பணிகள், பரபர என நடந்தாலும் கொட்டும் மழை மரணங்களை, மலையளவு உயர்த்தியது, உயிர்களை உருஞ்சி குடித்தது. தீவிரமாய் பெய்த மழைக்கு காரணம் எது?வயநாடு நிலச்சரிவுக்கு வயநாட்டுவாசிகள் மட்டும்தான் காரணமா? என்று கேட்டால்,வையகத்து வாசிகள் அனைவரும் காரணம் என நிச்சயமாக சொல்லலாம்.
தென் மாநிலங்களின் வானிலையை வரையரை செய்வது மேற்கு தொடர்ச்சி மலைத்தொடர். இம்மலைத்தொடர் கேரளத்தில் மட்டும் 40 சதவிதம் இருக்கிறது. இயற்கையின் இவ்வினியப் படைப்பை பராமரிக்காமல் மலையை குடைந்து, மரங்களை வெட்டி, அங்கே தேயிலை தோட்டங்களை, தேவைக்கும் அதிகமாய் அமைத்தது மண் சரிவிற்கு ஒரு காரணம்தான். அளவிற்கும் அளவை மீறி மலையை குடைந்ததன் விளைவாக பாறைகள் வலுவிழந்திருக்கும் இனியும் வழுவிழக்கும், மேலும் மண்ணை இறுகப்பிடித்திருக்கும் மரங்களை வெட்டிசாய்த்ததன் தொடர்ச்சியாக மண் சரியும் நிலைக்கு தள்ளப்பட்டது.

இவை அனைத்தும் அளவாய் இருந்திருந்தால்
இன்பமாக இருந்திருக்கும்
பலர் சட்டங்களை மீறி, அதிகாரிகளை லஞ்சத்தால்
அடைத்து. இயற்கையை அழித்ததன் விழைவு தான்
ஜூன் 30, 31 ஆம் நாட்களில் நிகழ்ந்த துயரம்.
அளவை விட அதிகமாக 572 மில்லி மீட்டர் மழை .
அதனால் நிகழ்நத துயரம்.
வயநாடு நிலச்சரிவுக்கு வயநாட்டு வாசிகள்
மட்டும்தான் காரணமா? என்று கேட்டால், வையகத்து
வாசிகள் அனைவருமே காரணம் என நிச்சயமாக
சொல்லலாம்

அன்றாட வாழ்க்கை பணிகள்
முடித்துவிட்டு கண் மூடினார்கள்
மாரி கசிந்தது, பூமி குளிர்ந்தது.
நேரம் நகர..
மாரி பொழிந்தது, தரை
தளர்ந்தது,
காலம் கடக்க...
மாரி கொட்டியது, மண்
சரிந்தது.
அவர்கள் கண்மூடியே
இருந்தார்கள். துயரத்தில்
ஒலித்தது துக்கத்தின் ஓலம்





பிரின்ஸ் ஆரோக்கியராஜ்
வளனார் அன்பியம்

# முதுமையில் ஏனோ முள்முடி



“தாயிற் சிறந்த கோயில் இல்லை” என்று ஔவையார் அப்போதே தாய்மையின் சிறப்பினை போற்றி பாடியவர். தாய் என்பவள் இல்லை என்றால் இந்த உலகத்தில் மனிதன் என்ற பிறப்பே இருந்திருக்காது. அன்பினுடைய முழு வடிவமே தாய்மையை தான் குறிக்கும். சுயநலம் இல்லாத ஒரு உறவு என்றால் இந்த உலகில் தாய் மட்டும்தான். அம்மா என்ற ஒரு வார்த்தையில் முழு உலகமே அடங்கிவிடும்.

இந்த உலகத்தில் அம்மாவைவிட வேறு எந்த சிறப்பும் இல்லை. நம்மை காப்பதற்கு பல கடவுள்கள் இருந்தாலும் தன் அன்னையை போல் காப்பதற்கு இந்த உலகத்தில் ஈடு இணை எதுவும் இல்லை. தான் அறிவில் குறைவாய் இருந்தாலும் தன்னுடைய குழந்தை அறிவிலும், படிப்பிலும் மற்றும் பல துறைகளில் சிறந்து விளங்க வேண்டும் என்று தன்னலம் பார்க்காமல் நினைப்பவள் அம்மா மட்டுமே.

தாய் என்பவள் மனிதருக்கு மட்டுமல்லாமல் அனைத்து ஜீவராசிகளுக்கும் பொருந்தக்கூடியவள். யாராலும் தாய்மையின் பாசத்தை விலை கொடுத்து வாங்க முடியாது. ஐந்து அறிவு படைத்த விலங்கினம் கூட தன்னுடைய குட்டிகளை பாதுகாத்து அதற்கு உணவளித்து தாய்ப்பாசத்தை வெளிப்படுத்துகிறது. தாய்ப்பாசம் ஒன்று இல்லையென்றால் இந்த உலகமே ஏதோ நிறைவு பெறாதது போன்று இருக்கும்.

ஒரு தாய் தன்னுடைய உதிரத்தையே பாலாக தந்து குழந்தைகளை பாதுகாத்து வளர்த்து வருகிறாள். தனக்குள் எத்தனை கஷ்டங்கள் இருந்தாலும் அதனை தன் குழந்தைகளிடம் வெளிப்படுத்தாமல் மகிழ்ச்சிப்படுத்த கூடிய ஒரு ஆற்றல் தாய்மையிடம் மட்டுமே இருக்கிறது. வணக்கத்திற்கும், மரியாதைக்குரிய உயர்நத ஸ்தானத்தை நமது அன்னையர்களுக்கு வழங்க வேண்டும்.



# தாயின் புதிய சேயாக

ஒரு தாய் இல்லாமல் அந்த குழந்தை அறிவுடனும், ஆரோக்கியத்துடனும் வளர்வது அவ்வளவு சுலபமல்ல. தன் குழந்தையை அன்போடு அரவணைத்து அவர்களுக்கு என்னென்ன தேவைகள் என்று அறிந்து உரிய நேரத்தில் அவர்களுக்கு பணிவிடை செய்துவிட்டு பாதுகாப்பதில் இந்த உலகத்தில் தாயை தவிர வேறு யாரும் இருக்க முடியாது. ஒரு மனிதன் சமூகத்தில் நல்ல வளர்ச்சி நிலையில் இருக்கிறான் என்றால் அதற்கு முக்கிய காரணம் அவனுடைய தாய்மையின் வளர்ப்பினையே தான் சொல்ல வேண்டும். உலகத்தில் எத்தனையோ உறவுகள் தன் மீது பாசத்தை காட்டுவதற்கு இருந்தாலும் தாய்ப்பாசம் எப்போதும் நமக்கு தனித்துவமானது தான்.



நாள் முழுவதும் ஓய்வு இல்லாமல் வேலை பார்த்துக்கொண்டே குடும்பத்திற்காக உழைக்கும் பெண்மையை எப்போதும் நாம் போற்ற வேண்டும். ஒரு தாயினுடைய முழுமையான அன்பு கிடைக்கப்பெற்ற குழந்தைகள் அனைவருமே வரம் பெற்ற குழந்தைகள் என்றே சொல்லலாம். தாயிடம் நாம் எந்த ஒரு கடமைகளையும் எப்போதும் எதிர்பார்த்து செய்யக்கூடாது. நம்முடைய பிறப்பிற்காக இறப்பின் வாசல் வரை சென்று வரும் அன்பின் சிகரம்தான் தாய். இளமை காலத்திலிருந்து நம்மை பாதுகாத்து வளர்த்து வந்த அன்னைக்கு நன்றி கடனாக அவர்களை இறுதி காலம் வரை வைத்து பாதுகாப்பது ஒவ்வொரு குழந்தையின் கடமையாகும்.





லாரா விஷால்
சகாய மாதா அன்பியம்

# மீண்டும் குழந்தையாக



நமது புனித சூசையப்பர் ஆலயம் சமயநல்லூரில் ஜூலை மாதம் 28ம் தேதியன்று, இறை திரு மகனான இயேசு கிறிஸ்துவின் தாத்தா பாட்டியரான சுவக்கீம் ,அன்னாள் அவர்களை கருத்தில் கொண்டு நம் ஆலயத்தில் தாத்தா பாட்டியர் தினம் கொண்டாடப்பட்டது

வாழ்க்கை
ஒரு பயணம் அல்ல
படைப்பு.
சொற்ப சிலருக்கு
அது சிறுகதை
பெரும்பாலோருக்கோ
பெருங்கதை எனும்
நெடுங்கதை!



சர்ப்ரைஸ்களும், சஸ்பென்ஸ்களும்
நிறைந்தது முதுமை
அது
முற்றுப்புள்ளி அல்ல
நீளத் தொடரும்
அத்தியாயம்!



வாசிக்கும் அவசரத்தில்
கடைசி அத்தியாய ரகசியத்தைக்
கண்டறியத் தவிப்பது
ஜோசியம் பார்க்கும் ஜோலி!



வாழ்க்கைப் புதினத்தை
எழுதும் படைப்பாளி
பாரபட்சம் பாராதவன்!

இளமையின் ஆட்டங்களுக்கு
முதுமையில் ஈவு கொடுக்கிறான்
முதுமையின் முகப்பொலிவு
முகச்சுருக்கம் அல்ல
வாழ்ந்த வாழ்க்கையின்
கதைச் சுருக்கம்!



முதுமை
மாற்றத்தை சொல்ல வரும்
கதைக் கரு!

லூர்து டார்வின்(BSC)
மைக்கேல் அன்பியம்

# இளைஞர் எழுச்சி







**04 - 08 - 2024 ஞாயிற்று கிழமை அன்று இளைஞர் ஞாயிறாக சிறப்பிக்கப்பட்டது. அதன் நிமித்தம். ஆண் & பெண் இளைஞர்களுக்காக புத்தாக்கப் பயிற்சி நடைபெற்றது.**

**தலைமை : அருட்பணி எடிசன் (அருட்பணி -செயலாளர் தமிழ்நாடு இளைஞர் இயக்கம்). தந்தை அவர்களின் வழிகாட்டுதலின் படி நடைபெற்றது.**

நாளைய உலகம் உங்கள் கையில், நாளைய தலைவர்கள் நீங்கள்தான், எதிர்கால நட்சத்திரங்கள்' இப்படியாக தேசிய அளவில் நீங்கள் பேசப்படுகிறீர்கள். எதிர்காலம் உங்களால் வளம் பெறும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள் உலக மாந்தர். குடும்ப அளவில் நோக்கினால் 'நாளை குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உன்கையில், சகோதரங்களை கரை சேர்க்கும் பொறுப்பு, குடும்பக் கடன்களை தீர்க்க வேண்டிய தார்மீகக் கடமை' எனப் பல உங்களைக் எதிர்பார்த்திருக்கின்றன. இவற்றில் பல உங்களுக்கு எதிர்காலத்தில் மகிழ்ச்சியளிப்பதாக இருக்கப் போகின்றன. சில புகழின் உச்சங்களுக்கும் இட்டுச் செல்லப் போகின்றன. வேறு பல கடமைகள் உங்களுக்கு உற்சாகம் அளிக்காவிட்டாலும் மகிழ்வைத் தராது போனாலும் கட்டாயம் செய்ய வேண்டியவை.

நாட்டிற்காகவும் வீட்டிற்காகவும் செய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பு உங்களுக்கு உள்ளது. ஆனால் இவற்றை முன்னெடுப்பதற்கு அஸ்திவாரம் உங்கள் நலன் மட்டுமே. அது நல்ல நிலையில் இருக்க வேண்டும். நலம் என்பது உடல் நலம் மட்டுமல்ல. உடல், உள்ளம், சமூக நோக்கு, ஆன்மீகப் பார்வை யாவும் நல்ல நிலையில் இருந்தால் மட்டுமே ஒருவர் ஆரோக்கியமாக இருப்பதாகக் கொள்ளலாம்.

உணவும் ,போஷாக்கும்

போஷாக்கான உணவு எந்தவொரு உயிருக்கும் அவசியமானது. உங்களுக்கும் அவசியம். ஆனால் இன்றைய தலைமுறையினராகிய உங்களில் பெரும்பாலானவர்களது உணவுமுறைகள் மாறிவருகிறது.

நாட்டிற்காகவும் வீட்டிற்காகவும் செய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பு உங்களுக்கு உள்ளது. ஆனால் இவற்றை முன்னெடுப்பதற்கு அஸ்திவாரம் உங்கள் நலன் மட்டுமே. அது நல்ல நிலையில் இருக்க வேண்டும். நலம் என்பது உடல் நலம் மட்டுமல்ல. உடல், உள்ளம், சமூக நோக்கு, ஆன்மீகப் பார்வை யாவும் நல்ல நிலையில் இருந்தால் மட்டுமே ஒருவர் ஆரோக்கியமாக இருப்பதாகக் கொள்ளலாம்.

வன்முறையை நிராகரித்து எதனையும் பேசி இணக்கப்பாடு காணும் பாதையை தேர்ந்து எடுக்க வேண்டும். பிரச்சனைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றிய அறிவு ஒவ்வொருவர்க்கும் தேவை.எதையும் திறந்த மனத்தோடும் விட்டுக் கொடுப்புகளுடனும் செய்து சுமுகமாக தீர்வு காண்பதற்கான பயிற்சியை கல்வி மட்டுமின்றி ஆன்மீக ஸ்தாபனங்களும் செய்ய முடியும். எனவே காத்திருக்கும் எதிர்காலத்தை ஒளிமயமாகவும், பொன்விளைவதாகவும், மகிழ்ச்சி நிறைந்ததாகவும்  ஆக்க முயலுங்கள். அதற்கு ஏற்றவகையில் உங்கள் உடலையும் உள்ளத்தையும் நலமாகப் பேணுங்கள்.

நாளைய உலகம் உங்கள் கையில் உங்களுக்காக மட்டுமல்ல முழு உலகத்திற்காகவும்.



லாரா விஷால்(BE)
சகாய மாதா அன்பியம்

## “மஹா விஷ்ணுவிற்கு எதிராக”

# கண்டன அறிக்கை




கர்மாஎன்பது முற்பிறவியிலும் இல்லை. இனிவரப்போகும் பிறவியிலும் இல்லை, ஏனெனில் பிறவி ஒன்றே ஒன்று தான். அவரவர் செயலுக்கேற்ற பலன் இப்பிறவியிலேயே உண்டுஎன்பது தான் நமது நம்பிக்கை.
"ஏமாந்து போகவேண்டாம்; கடவுளை கேலிசெய்ய முடியும் என நினைக்காதீர்கள் ஒருவர்தாம் விதைப்பதையே அறுவடை செய்வார்". (கலா: 6:7).
இப்பிறவியிலேய நீ செய்த நல்லவற்றுக்கு சன்மானமும், தீயவற்றுக்கு தண்டனையும் உண்டு.
இயேசுசென்று கொண்டிருக்கும் போது. பிறவியிலேயே பார்வையற்ற ஒருவரைக் கண்டார். இவர் பார்வையற்றவராய் பிறக்கக்காரணம் இவர் செய்த பாவமா? இவர் பெற்றோர் செய்த பாவமா?......
என்றுஇயேசுவிடம் சீடர்கள் கேட்டார்கள். இவர் பெற்றோர் பாவம்இல்லை, கடவுளின் செயல் இவர் வழியாக வெளிப்படும்பொருட்டே இப்படிப்பிறந்தார். (யோவ:9:1-3)
கடவுளின்திட்டம், இறைத்திருவுளம் நிறைவேற வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.
மனிதனுக்குவாய் அமைத்தவர் யார்? அவனை ஊமையாக அல்லது செவிடாக அல்லது பார்வையுள்ளவனாக; அல்லது குருடனாக வைப்பவர் யார்?

ஆண்டவர்தானே!. (வி.ப.4-11).
ஆண்டவர்தான் அவரது திருவுளம் நிறைவேற இவ்வாறு படைத்திருக்கிறார்
ஆண்டவரே நீர் அனைத்தையும் ஆற்ற வல்லவர். நீர் நினைத்த எதையும் தடுக்க இயலாது. அறிவில்லாமல் ஆலோசனையை மறைப்பவன் அவன்? என்று கேட்டீர், உண்மையில் நான் தான். புரியாதவற்றைபுகன்றேன், அவை எனக்கு விளங்காஅளவுக்கு விந்தையானவை, (யோபு: 42-2-3).
நமக்குபுரியாதவை விளக்கும் அளவுக்கு விந்தையானவைஎல்லாம் அறிந்தவர். போல மஹா விஷ்ணுபேசியது மிகவும் கண்டிக்கத்தக்கது.
சந்திராயன் III விண்கலம் நிலவின் தெற்கு பகுதியில் தரையிறங்கிய பெருமை இந்திய விஞ்ஞானிகளைச் சேரும், செயற்கை நுண்ணறிவில் இறந்தவர்களை பேசச் செய்யும்; நடக்கச் செய்யவும் அளவுக்க அறிவியலும் தொழில்நுட்பமும் வளர்ந்த இக்காலச் சூழ்நிலையில் மாணவர்களுக்கு முற்போக் கான; நேர்மறையான "என்னால் முடியும்" என்ற நம்பிக்கையூட்டும் வார்த்தைகள். தமிழில்கொட்டிக் கிடக்க; "கர்மா"என்ற பிற்பேர்க்கான மூடநம்பிக்கையை வளர்க்கக் கூடிய சிந்தனைகளை தவிர்க்க வேண்டும் இப்படி மாணவர்களின் எதிர்காலத்தை இருளுக்கு அழைத்துச் செல்லும் மஹா விஷ்ணு-வை வன்மையாக கண்டிக்கின்றோம்.
அறிவியல் மேதைகளை ஈன்றெடுத்த அரசு பள்ளிக்கு சென்று. மாணவர்களிடம் ஊக்க உரை என்று கூறி, வரும்கால அறிவியல் மேதைகள், சமூகசிந்தனையாளர்கள் ஆக இருகின்ற எம் மாணக்கர்களிடம் பிற்போக்கு தனமாக “கர்மா” என்ற பாசிச சிந்தனையை திணிக்க முற்படும் மஹாவிஷ்ணு (ம) அவர் சார்ந்த அமைப்பிற்கு கண்டனங்கள்

மாற்றுதிறனாளிக்கு இடஒதுக்கீடு, அரசுவேலை. என அரசு அவர்களின் வாழ்க்கை மேம்படவும் அவர்களின் குறைகளை தவிர்க்கவும் முயற்சிகள் செய்கிறது . அதன் நீட்சியாக மஹாவிஷ்ணு உரையாற்றிய அப்பள்ளியில் மஹாவிஷ்ணுவின் பிற்போக்கு சிந்தனைக்கு எதிராக முதல் குரல் கொடுத்தது பார்வை அற்ற பகுத்தறிவு கண்களை உடைய மாற்று திறனாளி ஆசிரியர் தான். அவரின் கேள்வி விஷ்ணு அவரை இழிவுபடுத்தி பேசியது. மேலான் குடியரசு தலைவர், மேலான் ISRO தலைவர் (ம) உலகின் பல்வேறு பெரிய நிறுவனங்களின் தற்போதைய தலைவர்கள் என அனைவரையும்



உருவாக்கியது இந்த அரசு பள்ளி பாடத்திட்டம்தான் அவற்றின் மீதும் அவற்றின் தரம் மீதும் விமர்சனம் செய்யும் மகா விஷ்ணுவும் இதே கல்வி திட்டத்தில்தான் பயின்றார் என்பதை மறக்கவேண்டாம்.

மஹாவிஷ்ணுவின் அநாகரிக பேச்சுக்கு அரசு அவர் மீது எடுத்திருக்கும் நடவடிக்கை பாராட்டக் கூடியது.

மதம் (ம) மதக்கொள்கை ஒருவரை நெறிப்படுத்த தான் அன்றே பிளவுபடுத்த இல்லை.....

மனங்களால் இணைவோம்...
மனிதம் காப்போம்..!



மைகேல் பிராங்க்(BE)
வளன் அன்பியம்



குழந்தை இயேசு
கோவில் திருவிழா
M.G.R நகர் .



புனித
அந்தோனியார்
கோவில் திருவிழா
ஊர்மெச்சிக்குளம் .



புனித
ஆரோக்கிய அன்னை
கோவில் திருவிழா
கீழமாத்தூர்.

# இணைவோம் இணையத்தில்



HOME SUBSTATIONS RESOURCES PARTICIPATORIES

ST JOSEPH'S CHURCH
Samayanallur , Madurai-625402

இயேசுவின் தந்தையும் மரியாவின் துணைவரும் கடின உழைப்பு, நேர்மை, ஈகம் ஆகியவற்றின் மாதிரியும் தொழிலாளர்களின் பாதுகாவலரும் கனவில் இறைத்திருவுளம் கண்டவருமான எம் பங்கின் பாதுகாவலரான புனித சூசையப்பரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். ...†

SHORT HISTORY

The parish was established in 1910 with Fr. Prince, S.J., as the first parish priest. In 1923, Fr. Raja Athisiyam, S.J., laid the foundation for the church, which was completed by Fr. C. Montaud, S.J., in 1932.

. Fr. T. Kurieu, S.J., erected the church tower. Fr. Peter Roy improved the presbytery and the school building. Frs. Arul Rayan, B. Pinto, and Francis Xavier worked to elevate the spiritual level of their congregation.

Fr. Alexis, who served this parish for 18 years, constructed a two-storied building for the school, the grotto for Our Lady of Fatima, and extended the church. Three other significant achievements were made possible after prolonged efforts.

. Just behind the school, there was an open ground that the Collector was willing to donate to the school to be used as a playground. As soon as the potters heard of it, they claimed it as theirs and built 40 houses on it overnight. It took two and a half years to make them vacate. It was named 'St. Joseph's Playground.' During the tenure of Fr. Lourdu Ubagaram, the golden jubilee of the church was celebrated; he renovated the church and the presbytery, laid a path between the presbytery and the main road, built the compound wall, constructed churches in Thodaneri and Kilamathur, and arranged for an abundant water supply for the students.

Fr. N.P. Alphonse, who came to this parish in 1983, besides building a chapel in Oormachikkulam and improving the school buildings in Samayanallur and Sholavandan, engaged in direct evangelization with the help of a zealous group. He also started youth associations in villages and paved the way for ecumenism and dialogue.

He was sensitive to the suffering of the Sri Lankan Tamils and undertook a fast. He conducted a procession of women with empty pots to urge the authorities to take

**4 - 08 - 24**

**நமது பங்கு செயல்பாடுகளை இறைமக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் விதமாக, நம் பங்கு இளைஞர் இயக்கத்தினர்களான செல்வன்.லாரா விஷால் மற்றும் செல்வன்.லூர்து டார்வின் இணைந்து உருவாக்கிய இணைய தளத்தினை பங்குத்தந்தை தொடங்கி வைத்தார்.**

# அழகு..!

இன்றைய உலகு
அழகை ஆராதிக்கிறது
உடல் அழகாக இருப்பது அழகா..
இல்லை
உள்ளம் அழகாக இருப்பது அழகா..
எது அழகு
உள்ளத்தில் கனிவும்
எண்ணத்தில் உயர்வும்
குணத்தில் சாந்தமும்
செயலில் நேர்மையும் அழகு
எல்லாவற்றிற்கும் மேலாக
எவரையும் காயப்படுத்தாத
வார்த்தைகளை பேசும் மனிதம் தான்
உலகின் தலைசிறந்த அழகு..!

*A J R* பிரின்ஸி -*Bsc*
யோவான் அன்பியம்



புனித சூசையப்பர் கோவில்
சமயநல்லூர்

STJOSEPH_CHURCH